**செய்தி வெளியீடு** **நாள் : 30.09.2025**

**வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்படவுள்ள மாதவரம் சட்டமன்ற தொகுதியில் "பாடியநல்லூர் பேருந்து நிலையம்" அமைப்பதற்கான பணிகளை மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தொடங்கி வைத்தார்.**

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (30.9.2025) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** மாதவரம் சட்டமன்ற தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் "பாடியநல்லூர் பேருந்து நிலையம்" அமைப்பதற்கான பூமி பூஜையில் கலந்து கொண்டு, பணிகளை தொடங்கி வைத்தார்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி சிஎம்டிஏ சார்பில் ரூபாய் 200 கோடி மதிப்பீட்டில் **11 மாநகர போக்குவரத்து கழக** பேருந்து நிலையங்களான திரு.வி.க. நகர், பெரியார் நகர், தண்டையார்பேட்டை, முல்லை நகர், கண்ணதாசன் நகர், அம்பத்தூர், திருவான்மியூர், ஆவடி, அய்யப்பன்தாங்கல், வள்ளலார் நகர் மற்றும் பாடியநல்லூர் ஆகிய பேருந்து நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு, அதில் அண்மையில் திரு.வி.க. நகர் மற்றும் பெரியார் நகர் ஆகிய 2 பேருந்து நிலையங்கள் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** திருக்கரங்களால் 25.08.2025 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அற்பணிக்கப்பட்டது. மேலும், தண்டையார்பேட்டை, முல்லை நகர், கண்ணதாசன் நகர் மற்றும் அம்பத்தூர் ஆகிய பேருந்து நிலையங்கள் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்காக அற்பணிக்கப்படவுள்ளது. திருவான்மியூர், ஆவடி, அய்யப்பன்தாங்கல் மற்றும் வள்ளலார் நகர் ஆகிய பேருந்து நிலையங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக இன்று (30.9.2025) மாதவரம் சட்டமன்ற தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் "பாடியநல்லூர் பேருந்து நிலையம்" அமைப்பதற்கான பணிகளை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.சுதர்சனம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மு.பிரதாப், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, கண்காணிப்புப் பொறியாளர் திரு.ராஜன்பாபு, எம்டிசி பொது மேலாளர் (இயக்கம்) திரு.நெடுஞ்செழியன், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

Verified @ RealEstate™